DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

DVC.No.2/2022

Deposition of witness:PW2

| | | | |
|---|---|---|---|
| Name | அமுதவள்ளி | Taluk | |
| Husband's Name | ராஜகோபாலன் | Village | |
| Age | 70 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **18.04.2026.** | | | |

(Respondent 1 present, R2 to R6 absent.)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** இவ்வழக்கின் மனுதாரர், எனது சொந்த அக்கா மகள் ஆவார். மனுதாரர் தனது முதல் திருமணத்தின் போது அவரது கணவருடன் சேர்ந்து நான்கு ஐந்து மாதங்கள் ஒன்றாக வாழ்ந்தார். முதலாவது திருமணத்தில், எதிர்மனுதாரரின் கணவருக்கு வேறொரு பெண்ணுடன் திருமணத்திற்கு பிறகும் தொடர்பு இருந்ததனால் மனுதாரர் அவருடன் தொடர்ந்து வாழாமல் வந்துவிட்டார். மேற்படி விவரங்களை எனது முதன்மை விசாரணையில் கூறியுள்ளனா என்றால் கூறியுள்ளேன். மனுதாரர் தனது முதல் திருமணத்திற்கு பிறகு பணத்தாசையின் காரணமாகதான் முதல் கணவரை பிரிந்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர், எதிர்மனுதாரரை திருமணம் புரிந்த முதல் நாளே தனிகுடித்தனம் செல்ல வேண்டும் என்று கேட்டதனால்தான் அவர்களுக்குள் பிளவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. திருமணம் நடந்து மூன்றாவது நாளே பொருட்களை எல்லாம் எதிர்மனுதாரர் வீட்டில் வாங்கிக் கொண்டதனால் தான் பிரச்சனை ஆரம்பித்தது. திருமணம் நடந்து மூன்றாவது நாளே பொருட்களை எல்லாம் எதிர்மனுதாரர் வீட்டில் வாங்கிக் கொண்டதனால்தான் பிரச்சனை ஆரம்பித்தது என்று வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், எதிர்மனுதாரர் வீட்டில் அவ்வாறு எதுவும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல.

**2.** மனுதாரரும், எதிர்மனுதாரரும் தனியாக குடித்தனம் செய்வதற்காக எதிர்மனுதாரரின் வீட்டின் பின்புறம் வீடு ஒன்றை சரி செய்யும் பொருட்டு மனுதாரரிடம் இருந்து **2** சவரன் நகை மட்டும்தான் எதிர்மனுதாரர் தரப்பில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வேறு எந்த பொருட்களும் எதிர்மனுதாரர் தரப்பில் வாங்கவில்லை என்றால் சரியல்ல, எல்லா பொருட்களையும் அவர்கள் தான் வாங்கிக் கொண்டார்கள். எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகள் காரணமாக மனுதாரர் காவல் நிலையத்திற்கு புகார் அளிக்க சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி புகாரில் உண்மை நிலை இல்லை என்று முடிவு செய்து தான் போலீசார் மேற்படி புகாரை தள்ளுபடி செய்து விட்டனர் என்றால் சரியல்ல. போலீசார் சரிவர விசாரணை செய்து புகாரின் மீது நடவடிக்கை எடுக்காததால் தான் இந்நீதிமன்றத்தை நாடி வந்துள்ளோம். மனுதாரரிடம், எதிர்மனுதாரர் **50,000** ரூபாய் ரொக்கமும், ஐந்து பவுன் நகையும் வாங்கி வரக் கூறியதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை நான் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே நடந்த முதல் திருமணத்தில் இருந்து பணப்பரிகாரம் பெற்றுக் கொண்டுதான் இவ்வழக்கின்

மனுதாரர் மேற்படி திருமண பந்தத்தில் இருந்து பிரிந்து வந்துள்ளார் என்றால் சரியல்ல, பணம் எதுவுமே வாங்கவில்லை. ஏற்கனவே நடைபெற்ற திருமண பந்தத்திலும் சரியாக நிலைத்திருக்காமல், இரண்டாவது திருமணம் செய்து அதிலும் முதல் நாளில் இருந்தே பிரச்சனை செய்து வந்ததனால், இவ்வழக்கின் மனுதாரரும், எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர் என்றாலும், மனுதாரரின் மீது உள்ள குறைகளை மறைப்பதற்காக அவருக்கு ஆதரவாக எதிர்மனுதாரர் மீது பழி சுமத்தி, இவ்வழக்கினை நடத்தி அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே மனுதாரர் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லாததனால்தான் அவர் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள பரிகாரங்களில், எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று பரிகாரம் கூறவில்லை என்றால் சரியல்ல, இருவரும் சேர்ந்து வாழ தான் நாங்கள் விரும்பினோம்.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

DVC.No.2/2022

Deposition of witness:PW3

| | | | |
|---|---|---|---|
| Name | பொற்கொடி | Taluk | |
| Husband's Name | வெங்கடேசன் | Village | |
| Age | 55 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **18.04.2026.** | | | |

(Respondent 1 present, R2 to R6 absent.)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் மனுதாரர் எனது தங்கை ஆவார். அவர் தனது முதல் திருமணத்திற்கு பிறகு முதல் கணவருடன், இரண்டு வாரங்கள் ஒன்றாக வாழ்ந்திருப்பாரா என்றால் 2 மாத காலங்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தார். மேற்படி முதல் திருமண பந்தத்தை மனுதாரர் சட்டப்படியாக முறித்து உள்ளாரா என்றால், சட்டப்படியாக விவாகரத்து பெற்றுள்ளார். மனுதாரர், எதிர்மனுதாரருடன் திருமணமான முதல் நாளில் இருந்து தனிகுடித்தனம் செல்லவேண்டும் என்று சண்டை போட்டதனால் தான் இருவருக்குள்ளும் பிரிவினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரரிடமிருந்து எதிர்மனுதாரர் வாங்கியதாக கூறப்படும் 2 சவரன் நகை கூட மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து ஒன்றாக தனிகுடித்தனம் செய்வதற்காக எதிர் மனுதாரரின் வீட்டின் பின்புறம் உள்ள வீட்டினை சரி செய்வதற்காக வாங்கப்பட்டதுதான் என்றால் சரியல்ல, அவர் தனது வேலைக்காக வாங்கினார். மனுதாரர் தனது முதல் திருமண வாழ்வினை பணப்பயன் பெற்றுக்கொண்டுதான் முறித்துக் கொண்டு வந்து விட்டார் என்றால் சரியல்ல, பணம் எதுவும் வாங்கவே இல்லை. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த உண்மை நிலவரங்கள் எதுவும் சரியாக தெரியாமல் மனுதாரர் எனது தங்கை என்பதனால் அவருக்கு அனுசரணையாக இவ்வழக்கில் எதிர் மனுதாரருக்கு எதிராக தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**